செ.வெ.எண்: 216 நாள்: 08.04.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குறு, சிறு தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களுக்கு சுகாதாரத்துறையினரால் நேரடியாக சென்று கோவிட் தடுப்பூசிகள் வழங்க நடவடிக்கை.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குறு, சிறு தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களுக்கு 11.04.2021 முதல் சுகாதாரத்துறையினரால் நேரடியாக சென்று கோவிட் தடுப்பூசிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

கோவிட் தொற்று அதிகரித்து வரும் நிலையில் பல்வேறு நோய் தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்தில் இயங்கிவரும் குறு, சிறு தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு கோவிட் தடுப்பூசி வழங்குவது தொடர்பாக மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (08.04.2021) சுகாதாரத்துறை, மாவட்ட தொழில் மையம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்தை பொருத்தவரை 9,000 க்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இதில் பணிபுரியும் பணியாளர்களுக்கு நாள்தோறும் பணிக்கு வரும் போது வெப்பமானி மூலம் உடலின் வெப்பநிலையை சோதித்தல், முகக்கவசம் அணிதல், சமூகஇடைவெளியை பின்பற்றுதல் ஆகியவற்றை முறையாக கடைப்பிடித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் தற்பொழுது சுகாதாரத்துறையின் மூலம் 11.04.2021 முதல் தொழிற்சாலைகளுக்கு நேரடியாக சென்று பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றி கோவிட் தடுப்பூசிகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோவிட் நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளித்தால் மட்டுமே முழுமையாக கோவிட் இல்லாத நிலையை உருவாக்க முடியும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர் திரிபுரசுந்தரி, கூட்டத்தில் துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.கலைவாணி, துணை இயக்குநர் (தொழிற்சாலைகள்) மகேஸ்வரபாண்டியன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**